# விலைமனுக்கோரல் (IFB)

## கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

## இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

CFHC

# மிரிஸ்ச மீன்பிடித் துறைமுகத்திலுள்ள பொது மலசலகூடத்தினை மீள்புனரமைத்தல்

கோப்பு இலக்கம் : **CFHC/PD/RPT/MRS/2026-81**

1. மிரிஸ்ச மீன்பிடித் துறைமுகத்திலுள்ள பொது மலசலகூடத்தினை மீள்புனரமைப்பு பணிகளை செய்வதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (DPC) தலைவரினால் கோரப்படுகின்றன. எதிர்பாராத செலவுகள் மற்றும் பெறுமதிசேர் வரி (VAT) இல்லாமல், பொறியியலாளர்களின் அண்ணளவான மதிப்பீட்டுச் செலவு 6.26 மில்லியன் ரூபாவாகும். இத்திட்ட அமைவிடம் மாத்தறை மாவட்டத்தில் மிரிஸ்ச மீன்பிடித் துறைமுகத்தில் உள்ளது.

2. இந்தப் பணிகளில் இடிப்புப் பணிகள், அகற்றும் பணிகள், கொங்கிறீட் பணிகள், தூண்களை செய்யும் பணிகள், நிரப்பும் பணிகள் மேலும் பல பணிகள் போன்றன அடங்கும்.

3. இந்தப் பணிகளில் மிரிஸ்ச மீன்பிடித் துறைமுகத்தில் வலுவூட்டப்பட்ட கொன்கிறீட் கூரை அமைப்பின் விளிம்புப் பகுதி, சுவர்கள், ஓடுகள் ஆகியவற்றை இடித்து அகற்றுதல். கொன்கிறீட் வேலை, ஓடு பதித்தல், சாந்து பூசுதல் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகியவற்றுடன் கூடிய நிறைவுப் பணிகள் என்பன அடங்கும். இந்த விலைமனுக்கோரலுக்கான நிர்மாணக் காலம் 90 நாட்காட்டி நாட்கள் ஆகும்.

4. விலைமனுக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் மேற்கொள்ளப்படும். ஒப்பந்தமானது அளவீடு மற்றும் செலுத்துதல் அடிப்படையில் அமையும்.

5. விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும். மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் கட்டிட நிர்மாணத் துறையில் C8,C7 மற்றும் C6 தரங்களில் CIDA நிறுவனத்தின் பதிவைப் பெற்றிருக்க வேண்டும்.

6. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்குத் தகுதி பெறுவதற்கான தகுதி நிபந்தனைகள் பின்வருமாறு அமையும்
   - கட்டிட நிர்மாணத் துறையில் (வருகை தரும்) 5 வருட அனுபவத்துடன் பி.எஸ்.சி தகுதி பெற்ற சிவில் பொறியியலாளர்
   - கட்டிட நிர்மாணத் துறையில் 02 வருட அனுபவமுள்ள, N.C.T. தகுதி பெற்ற சிவில் மேற்பார்வையாளர் (வதிவிட)
   - முடிவுத் திகதியிலிருந்து முந்தைய ஐந்து (05) ஆண்டுகளில் செய்யப்பட்ட நிர்மாணப் பணிகளின் வருடாந்த புரள்வு
   - கடந்த 10 வருடங்களில், இதே போன்ற தன்மை மற்றும் சிக்கலான தன்மை கொண்ட குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தை (இந்தத் தேவைப்பாட்டிற்கு இணங்குவதற்கு, கூறப்பட்ட பணிகள் 70% நிறைவடைந்திருக்க வேண்டும்). பிரதான ஒப்பந்தக்காரராக நிர்மாணித்த அனுபவம்
   - ரூ.5 மில்லியனுக்கு மேற்பட்ட ஒவ்வொரு விலைமனுவிற்கும், விலைமனுதாரர் 1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் நிறுவன பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழை பெற்றிருக்க வேண்டும். இது ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கான ஒரு தகைமையாகும்.

7. Interested eligible bidders may obtain further information from Manager Civil Engineering, Ceylon Fishery Harbours Corporation, No.15, P.O.Box 1747, and Rock House Lane, Colombo 15. Contact Numbers – Tele: 011-2529391

8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சிவில் முகாமையாளர் (பொறியியல்) இல. 15, த.பெ.இல 1747, மற்றும் ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15, அவர்களிடமிருந்து 011-2529391 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2026.08.11 ஆம் திகதி முதல் 2026.09.01 ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத ரூ.2000.00 கட்டணத்தைச் செலுத்தி கொழும்பு 15, இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், பெறுகை முகாமையாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்துப்பூர்வமான கோரிக்கை ஒன்றினை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

10. நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் “பெறுகை முகாமையாளர், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், இல.15, த.பெ.இல 1747, மற்றும் ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15” எனும் முகவரிக்கு 2026.09.02 ஆம் திகதி மு.ப.11.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். வருகைத் தந்துள்ள விலைமனுதாரர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் விலைமனுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் திறக்கப்படும்.

11. விலைமனுக்கள் 2026.11.18 ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும். (77 நாட்கள்)

12. சகல விலைமனுக்களும் (2026.12.16) வரை செல்லுபடியாகும் ரூபா அறுபத்தெட்டாயிரம் (ரூ.68,000.00) மதிப்புள்ள மனுப் பிணையத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். {105 நாட்கள் (விலைமனு செல்லுபடி + 28 நாட்கள்)} இது பிரிவு 9 நிலையான படிவங்கள் (விலைமனுவில்) சேர்க்கப்பட்டுள்ள படிவத்தில், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், இல.15, த.பெ.இல 1747, மற்றும் ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15” தலைவரின் பெயரில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுக்கோரல் பிணையமானது, இலங்கையில் செயல்படும் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கியிலிருந்து பெறப்படல் வேண்டும். ரொக்க வைப்பும் ஏற்றுக்கொள்ளப்படும்.

13. விலைக்கோரல் முந்தையக் கூட்டம் ஒன்று கொழும்பு 15, இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் 2026.08.21 ஆம் திகதி 11.30 மணிக்கு இடம்பெறும்.

14. முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, விலைமனுக்கோரலை சமர்ப்பிக்கும் முன்னர், சகல விலைமனுதாரர்களும் ICTAD SBD/03 இரண்டாம் பதிப்பின் இணைப்புப் பத்திரத்தை (ITB) கவனமாகப் படிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல.15, த.பெ.இல: 1747, ரொக்ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**